

VIMBAM

# 'சமத்துவம் கோரும் ஒடுக்கப்பட்டோருக்கான குரல்'

# 'Voice of the Oppressed for Equality'

## தோழர் Dr. தொல். திருமாவளவன்

## Comrade Dr. Thol Thirumaavalavan

**24th & 25th of August 2019 - London**


Trinity Centre, London E12

& SOAS - University of London, London WC1H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கடந்த 15 ஆண்டுகளாக இலண்டனில் இயங்கிவரும் 'விம்பம் கலை இலக்கிய திரைப்பட மற்றும் கலாச்சார அமைப்பின்' சார்பில் 2019 ஆகஸ்ட் 24 அன்று 'அமைப்பாய்த் திரள்வோம்' நூல் குறித்து உரையாடல் நிகழ்வு நடைபெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆண்டுதோறும் இத்தகைய நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வரும் இந்த அமைப்பு, தற்போது எனது அமைப்பாய்த் திரள்வோம் நூலுக்கு இச்சிறப்பை வழங்கியிருப்பது பெருமையளிக்கிறது. இந்த அரிய வாய்ப்பை உருவாக்கியுள்ள விம்பம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவருமான அருமைத் தோழர் கே. கிருஷ்ணராஜா அவர்களுக்கும் மற்றும் முதன்மையான பொறுப்பாளர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய அமர்வானது, அமைப்பாய்த் திரள்வோம் நூலுக்கு அயல்நாட்டில் நடக்கும் முதல் நிகழ்வாகும். இந்த நிகழ்வில் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழ்ச் சொந்தங்கள் பங்கேற்கவுள்ளனர் என்பதும், சிலர் இந்நூல் குறித்து உரைநிகழ்த்தவுள்ளனர் என்பதும் கூடுதல் மகிழ்வை அளிக்கிறது.

அத்துடன், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இந்நிகழ்வின் மூலம் இலண்டனில் எமது புலம்பெயர் தமிழ் உறவுகளையெல்லாம் மீண்டும் சந்திக்கிற ஒரு வாய்ப்புக் கிட்டியுள்ளதையும் எண்ணி இறும்பூது எய்துகிறேன்.

மகிழ்வுடன்,

**தொல். திருமாவளவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம்!

'விம்பம்' அமைப்பின் 15 வருட செயற்பாட்டில் இந்த நிகழ்வு பல்வேறு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. திரைப்படம், கலை, இலக்கியம் போன்ற தளங்களில் செயற்பட்ட விம்பம் முதன்முறையாக நேரடியாக ஒரு அரசியல் சார்ந்த நிகழ்வை நடாத்துவது இங்கு முக்கியமானது.

இந்த முடிவுக்கு நாம் வந்து, தோழர் Dr. தொல்.திருமாவளவனை அழைத்து அவரை கௌரவிப்பது என்பது ஒருவகையில் எமது, கலை, இலக்கிய சமூகம் சார்ந்த கொள்கைக்கு உறுதியான சான்றாக அமையும் என்பதில் நாம் பெருமை கொள்கிறோம். இதுவரையான விம்பத்தின் அனைத்து கலை, இலக்கிய செயற்பாடுகளும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவுக் குரலாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆதிக்கத்தினையும் அதிகாரத்தினையும் எதிர்க்கும், கேள்விக்குள்ளாக்கும் எழுத்துக்களுக்கும் படைப்புக்களுக்கும் 'விம்பம்' தனது முழு செயற்பாட்டுத் தளத்தையும் ஆதாரமாக்கி வந்துள்ளது.

தோழர் Dr. தொல்.திருமாவளவனை நாம் ஒரு அரசியல் கட்சி தலைவராக மட்டும் பார்க்கவில்லை. நாளாந்த களச் செயற்பாட்டாளாராக, மனித சமத்துவத்துக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட முதன்மைப் போராளியாக, ஒடுக்கப்படும் மனிதர்களின் துயரங்களில் தோய்ந்து நிற்கும் மானிடத்தின் குரலாகவே காண்கிறோம். அந்த வகையில் இந்த நிகழ்வு விம்பத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய பதிவும் பங்களிப்புமாகும்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்விற்கு வருகை தந்திருக்கும்
தோழர் Dr. தொல். திருமாவளவனுக்கும், இந்நிகழ்விற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து தோழர்களுக்கும், இங்கு சமூகமளித்திருக்கும் உங்கள் அனைவருக்கும் 'விம்பம்' தனது நன்றியை தோழமையுடன் பகிர்ந்து கொள்கின்றது.

வரலாற்றின் வளர்ச்சித் திசையில் தொடர்ந்தும் எமது பயணங்கள் அமையட்டும், அனைத்து சவால்களையும் எதிர்கொண்டபடி...

VIMBAM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல். திருமாவளவன்

## அரசியல், சமூக வரலாறு

### தொகுப்பு: எம். பௌசர்

**கே.** 2019ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகளை தேசிய அளவிலும் தமிழக அளவிலும் எப்படிப் பார்க்கிறீர்கள்?



**ப.** தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சாதிய, மதவாத சக்திகளுக்கு இடமில்லை என்பதை மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். 2016ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகு தி.மு.க. தலைமையில் மதச் சார்பற்ற ஜன நாயக சக்திகள் ஒருங்கிணைந்து தொடர்ச்சியாக மோதி அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்ததன் விளைவாக மோதி எதிர்ப்பு அலை இங்கே வலுவாக கட்டமைக்கப்பட்டது. அதன் விளைவாகத்தான் தி.மு.க. கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. தமிழக அரசியல் வரலாற்றில் இல்லாதபடி ஒவ்வொரு தொகுதியிலும் பல லட்சக் கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர். இந்தியா முழுவதும் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வெற்றி கிடைத்த நிலையில், தமிழ்நாட்டில் அதற்கு இடமே இல்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது. அதன் தாக்கம் தென்னிந்திய மாநிலங்களான கேரளா, ஆந்திராவிலும் வெளிப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு சமூகநீதிக்கான மண் என்பதை அகில இந்திய அளவில் மதவாத சக்திகளுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருக்கின்றன என்று நான் நம்புகிறேன்.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஒரு பொருந்தாக் கூட்டணி. வாக்குவங்கி அரசியலுக்காக கடைசி நேரத்தில் பேரம் பேசி உருவாக்கப்பட்ட ஒரு கூட்டணி. அதனால் அக்கூட்டணி கடுமையான தோல்வியை சந்திக்க நேர்ந்துள்ளது. ஆனால், தி.மு.க. கூட்டணி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்ட கூட்டணி. கொள்கை சார்ந்து உருவாக்கப்பட்ட கூட்டணி. குறிப்பாக மதச்சார்பின்மையை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் பா.ஜ.க. உள்ளிட்ட சங்கபரிவார அமைப்புகளை தமிழ்நாட்டில் வேரூன்றவிடாமல் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் நீட் எதிர்ப்பு, ஹைட்ரோ கார்பன் போன்ற திட்டங்களை எதிர்த்து பல போராட்டங்கள், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் எதிர்ப்பு என படிப்படியாக பல போராட்டங்கள் இங்கு வலுப்பெற்றதால் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு மோதி எதிர்ப்பு அலை தமிழ்நாட்டில் இருந்தது. இது மிகப் பெரிய வெற்றியை தி.மு.க. கூட்டணிக்கு வழங்கியிருக்கிறது.

**கே.** நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளி வந்த போது, நீங்கள் போட்டியிட்ட சிதம்பரம் தொகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய வெற்றி என்பது இறுதிவரை போராட்டமாகவே இருந்தது. என்ன காரணம்?

**ப.** எனக்கு துவக்கத்திலிருந்தே போராட்டம்தான். முதலில் கூட்டணி அமைவதே போராட்டமாகத்தான் இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தி.மு.கவுடன் இணைந்து போராட்டக் களத்தில் செயல்பட்டிருந்தாலும் கூட தேர்தல் கூட்டணி அமைக்கும் நேரத்தில் தி.மு.கவும் பா.ம.கவும் பேச்சுவார்த்தை நடத்தின. தி.மு.க. - பா.ம.க. கூட்டணி அமையாது என்ற நம்பிக்கையில் நான் பொறுமையாகக் காத்திருந்தேன். இதுவே ஒரு போராட்டமாகத்தான் ஒரு சில நாட்கள், சில வாரங்கள் கடந்தன. கடைசியில் தி.மு.கவோடு கூட்டணியில் தொடரும் சூழல் அமைந்தது.

கூட்டணியில் இடம்பெற்ற பிறகு, தொகுதிப் பங்கீடு, என்னென்ன தொகுதி என அடையாளம் காணுதல் போன்றவற்றில்கூட கடுமையாக நாங்கள் போராட வேண்டியிருந்தது. பின்னர் இரண்டு தொகுதிகளைப் பெற்று நாங்கள் தேர்தல் களத்தில் இறங்கினோம். மற்ற எந்தத் தொகுதியிலும் இல்லாத அளவுக்கு சிதம்பரம் தொகுதியில் மிக மூர்க்கமாக சாதி வெறி சக்திகளும் மதவெறி சக்திகளும் எங்களை எதிர்த்தார்கள். வாக்கு சேகரிக்க விடாமல் தடுத்தார்கள். பல கிராமங்களில் நுழையவிடாமல் தடுத்தார்கள். எழுதிய விளம்பரங்களை அழித்தார்கள். ஒட்டிய போஸ்டர்களைக் கிழித்தார்கள். கல்லெறிந்தார்கள். காயப்படுத்தினார்கள். சாதிப் பெயரைச் சொல்லி வசை பாடினார்கள். அது ஜாதி மோதலாக மாறிவிடக்கூடாது என்பதற்காக எல்லாவற்றையும் நாங்கள் பொறுத்துக்கொண்டோம்.

வாக்குக் கேட்பது ஒவ்வொரு வேட்பாளரின் உரிமை. எல்லா தேர்தலிலும் பிரசாரத்தின்போது நான் எதிர்ப்பை சந்திப்பது வழக்கம்தான். ஆனால் இந்தத் தேர்தலில் திட்டமிட்டு ஜாதி அடிப்படையில் இதைச் செய்தார்கள். எனக்காக வாக்கு சேகரித்தவர்கள் மீது தாக்குதல் நடந்தது. குறிப்பாக தி.மு.கவை சேர்ந்த பொறுப்பாளர்களை, அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதாலேயே அவர்களை இழிவு படுத்தி பேசினார்கள். எனக்கு வேலை செய்யக்கூடாது, வாக்கு சேகரிக்கக்கூடாது என அவர்களுக்கும் நெருக்கடி தந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களை வாக்களிக்கவிடாமல் பல கிராமங்களில் தடுத்தார்கள். அவர்களே அந்த வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி வாக்குகளை பதிவு செய்துகொண்டார்கள்.

அந்தத் தொகுதியில் சங்கபரிவார அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனக்கெதிராக தீவிரமாக அவதூறுகளைப் பரப்பினார்கள். பிரசாரம் செய்தார்கள் என்ற தகவல்களும் வந்தன. அதை உறுதிப்படுத்தும் வகையில் பொன்பரப்பியில் இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர், பலரைத் திரட்டி எங்கள் விளம்பரங்களை அழிப்பது, சுவ ரொட்டிகளைக் கிழிப்பது, எனது தேர்தல் சின்னமான பானையை உடைப்பது, பக்கத்து கிராமங்களைச் சேர்ந்தவர்களைத் திரட்டி எங்களுக்கு வாக்களித்த மக்கள் மீது தாக்குதல் நடத்துவது போன்றவற்றையும் செய்தார்.

நான் வெற்றிபெற்றுவிடக்கூடாது என திட்டமிட்டு சாதீய, மதவாத சக்திகள் கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்தார்கள். எனக்கெதிரான அவதூறுகளைத் திட்டமிட்டு பரப்பினார்கள். மிக நெருக்கடியான சூழல்களை எனக்கெதிராக உருவாக்கினார்கள். என்னோடு வந்தவர்களின் வாகனங்களின் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தினார்கள். நான் செல்லும் வழியில் மரங்களைக் குறுக்கே போட்டு, பாறாங்கற்களைத் தூக்கிப்போட்டு பயணங்களைத் தடை செய்தார்கள். தலித் அல்லாத குடியிருப்புகளுக்குள் நுழையக்கூடாது என மறித்தார்கள். எல்லாவற்றையும் மீறி இந்தத் தேர்தலில் மக்கள் எனக்கு வெற்றி வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். 7 இடங்களில் போட்டியிட்ட பா.ம.க. தோற்றுப்போனது. என்னைத் தோற்கடிக்க வேண்டும் என்ற முயற்சியிலும் அவர்கள் தோற்றுப்போனார்கள். பா.ம.க. மட்டுமல்ல, சங்கபரிவார அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து எனக்கெதிராக வேலை செய்தார்கள்.

தேர்தல் நேரத்தில் நான் சனாதன எதிர்ப்பு மாநாடு நடத்தியது அவர்களுக்கு மிகப் பெரிய உறுத்தலாகவும் எரிச்சலாகவும் இருந்தது என்பதை அவர்கள் செய்த பிரசாரத்தில் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இதையெல்லாம் மீறி ஒடுக்கப்பட்டவர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் தி.மு.க. கூட்டணியையும் என்னையும் ஆதரித்தார்கள். அதைத் தாண்டி சாதிய அடிப்படையில் என்னை ஒதுக்க நினைத்த சூழலில், தலித் அல்லாத, சிறுபான்மைச் சமூகம் சாராத மக்களும் கணிசமாக வாக்களித்த காரணத்தால்தான் 5 லட்சம் வாக்குகளை என்னால் பெற முடிந்தது. சொற்பமான வாக்கு வித்தியாசமாக இருந்தாலும் கூட வெற்றிபெற முடிந்தது. எனவே அங்குலம் அங்குலமாக இந்தத் தேர்தல் களத்தில் நாம் போராடிப் போராடி வெற்றியை எட்ட முடிந்தது. இந்த வெற்றி இலகுவாகக் கிடைத்துவிடவில்லை. இந்த வெற்றியை வழங்கிய மக்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

★★★

இவ்விரு கேள்வி பதில்களிலிருந்து இந்தியாவின் சமகால நிலைமையையும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இன்றைய நிலைப்பாடுகளையும் புரிந்து கொள்ள முடியும். தோழர் திருமாவளவன், அவரது மக்கள் இயக்கம் பற்றிய சிறு அறிமுகத்தினை பதிந்து கொள்வதற்கே கீழ்வரும் தகவல்கள் திரட்டி தரப்படுகிறது.

★ 1962 ஆகஸ்ட் 17ம்திகதி, வறட்சியும் வறுமையும் மிகுந்த அங்கனூர் கிராமத்தில் மிக ஏழ்மையான குடும்பத்தில் ஒலை வேய்ந்த களிமண் குடிசையில் பிறந்தார். தந்தை அன்றாட கூலித் தொழிலாளி. உயர் நிலைப்பள்ளியே இல்லாத கிராமம் அது. தனது கிராமம் பற்றி, நேர்காணலொன்றில் திருமாவளவன் இப்படி சொல்கிறார்.

"அங்கனூர் முன்பு திருச்சி மாவட்டத்தில் இருந்து, பின்னர் பெரம்பலூர் மாவட்டமாகி இப்போது அரியலூர் மாவட்டத்தில் இருக்கிறது. சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் கொண்ட கிராமம். இதில் தலித் குடும்பங்களின் எண்ணிக்கை 200. மிகவும் பின்தங்கிய கிராமம் அங்கனூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரம், சாலை வசதிகள் இருக்காது. மழை பெய்தால் நடக்கக்கூட முடியாதபடிக்கு சேறும் சகதியுமாக நிறைந்து இருக்கும். காவல் துறையினர் எங்கள் ஊர்ப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள். எனக்கு நினைவு தெரிந்து எந்த அரசியல் கட்சியின் வேட்பாளரும் வாக்கு சேகரிக்கக்கூட எங்கள் ஊருக்கு வந்தது இல்லை. அவ்வளவு பின்தங்கிய கிராமம்."

அப்பாவும் அம்மாவும் விவசாயக் கூலிகள். கல்யாணத்துக்கு, தீபாவளிக்கு, பொங்கலுக்கு என்று வாங்கிய சின்னச் சின்ன கடன்களுக்காக இருந்த அரைக்கால் காணி நிலத்தையும் கடன்பட்ட ஆண்டையிடமே எழுதிக்கொடுத்தார் அப்பா. எட்டாம் வகுப்பு வரைதான் ஊரில் உள்ள பள்ளியில் படித்தேன். எந்தச் சண்டை சச்சரவுக்கும் போக மாட்டேன். பாடப்புத்தகங்கள் வாங்க காசு இருக்காது. பழைய புத்தகங்களைத்தான் வாங்கித் தருவார் அப்பா. அதற்கும் சில சமயங்களில் வழி இல்லாமல் போகும். அப்போது நத்தம்பாடி பெரியசாமி என்ற ஆசிரியர்தான் மற்ற மாணவர்களிடம் இருந்து புத்தகங்களை வாங்கி எனக்குப் படிக்கக் கொடுப்பார். நான் அதை எடுத்துவந்து பாடங்களை எழுதிக்கொண்டு திரும்பத் தருவேன். ஏதோ இவை எல்லாம் எனக்கு மட்டும் நடந்தவை இல்லை. ஊரில் எங்கள் தலித் மக்கள் அத்தனை பேரின் நிலைமையும் இப்படித்தான்.

எங்கள் ஊரில் கோயிலுக்கான சாவடி ஒன்று உண்டு. திருவிழாவின்போது அங்கே சாமி சிலையை ஏற்றிச் செல்லும் சகடை, மரத்தால் செய்யப்பட்ட குதிரைகள் எல்லாம் இருக்கும். ஒரு நாள் நான் ஒரு குதிரையில் ஏறி விளையாடிக்கொண்டு இருந்தேன். அப்போது ஒருவர் வந்து 'படிக்கிற திமிரா உனக்கு?' என்று விரட்டி அடித்தார். அதே போல, ஒரு பலசரக்குக் கடையில் ஏதோ வாங்கிவிட்டு பத்து காசு கொடுக்கும்போது கையைத் தொட்டுக் கொடுத்தேன் என்று கடைக்காரர் என் அப்பாவிடம் புகார் சொன்னது நினைவில் இருக்கிறது. எங்கள் ஊர் செல்லியம்மன் கோயிலில் ஒரு தானியக் களம் இருக்கும். அங்கே உள்ள கதவை விளையாட்டாகத் திறந்துத் திறந்து மூடிக்கொண்டு இருந்தேன். அதைப் பார்த்த ஒருவர் என் அப்பாவிடம் வந்து 'படிக்க வைக்கிறதாலதான் உன் பிள்ளை இப்படி இங்கே எல்லாம் தைரியமா வர்றான்' என்று சத்தம் போட்டார்.

ஒரு நாள் அப்பாவைப் பார்க்க அவர் வேலை செய்யும் வீட்டுக்குச் சென்றேன். என்னை சாப்பிடச் சொன்னார்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்பா. சாப்பாடு நெல் அளக்கும் படி யில் இருந்தது. தண்ணீர் ஒரு இரும்புப் படியில் இருந்தது. ஒரு தட்டுகூட இல்லாமல்தான் அப்பாவுக்கு தினமும் மதியச் சாப்பாடு போடுகிறார்கள் என்று புரிந்தது. ஒரு மோட்டார் காணாமல் போய் விட்டது என்பதற்காக எங்கள் கிராமத்தைச் சேர்ந்த தலித் ஒருவரை விளக்குக் கம்பத்தில் கட்டி வைத்து, அவருடைய பத்து விரல்களிலும் மண்ணெண்ணெயால் நனைத்த துணியைச் சுற்றி தீ மூட்டினார்கள். பத்து விரல்களும் தீப்பிடித்து எரிந்ததை என் கண்ணால் பார்த்தேன். ஊர் பற்றிய நினைவுகளில் மறக்கவே முடியாத கொடூரம் இது."

★ விருத்தாசலத்தில் புதுமுகப்படிப்பு , சென்னை மாநிலக் கல்லூரியில் வேதியியல் படிப்பு. கல்வித்தேவையை நிறைவேற்றவே பண வசதி இல்லை. உழைத்தே படித்தார். சாதியக் கொடுமை அவரை துரத்திக் கொண்டே இருந்தது.

★ 1984 இல் கல்லூரி படிப்புக் காலத்தில் , தனது 24 வது வயதில் ஈழத்தமிழர் மாநாட்டைக் கூட்டினார்.

★ 1987 இல் சட்டக்கல்லூரி படிப்பு. கலைஞர் கருணாநிதியின் பேச்சு, எழுத்து, அரசியல் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு திமுக மாணவர் அணியில் இணைந்தார். அதன் பின் கோவையில் அரசாங்க வேலையில் இணைந்தார்.

★ 1988 இல், மதுரை வந்த போதுதான் மீண்டும் அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டார். தலித் மக்களுக்கான தனித்த அரசியல் இயக்கத்தினை வலுப்படுத்த வேண்டுமென உறுதி கொண்டார்.

★ 1989 இல் , தலித் சிறுத்தைகள் என்னும் தலித் இயக்கத்தின் தமிழகப் பிரிவை உருவாக்கிய வழக்கறிஞர் மலைச்சாமி என்பவர் இந்த ஆண்டு செப்டம்பர் 14 இல் படுகொலை செய்யப்பட்ட பொழுது, மதுரை தடயவியல் துறையில் பணியாற்றிக்கொண்டு இருந்த தொல். திருமாவளவன் மதுரையில் மலைச்சாமிக்கு நினைவேந்தல் கூட்டம் நடத்தினார்.

★ 1990 ஜனவரியில் - எடுக்கப்பட்ட முடிவின்படி தொல். திருமாவளவன் தலித் சிறுத்தைகள் அமைப்பின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ 1990 - தலித் சிறுத்தைகள் அமைப்பிற்கு விடுதலைச் சிறுத்தைகள் என பெயர் மாற்றிய தொல்.திருமாவளவன், 1990 ஆம் ஆண்டில் ஏப்ரல் 14 ஆம் நாளில் மதுரையில் அமைப்பினை பிரகடனம் செய்து கொடியேற்றினார்.

★ 1990 இல் அமைப்பின் கொள்கைகளாக-

சாதி,மத ஒழிப்பு,
வர்க்கபேத அழிப்பு,
பெண்ணுரிமை மீட்பு
தமிழ்த்தேசியக் காப்பு
ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பனவற்றை முன் வைத்தார்.

★ 1992 இல், டிசம்பர் 06ம் திகதியை அம்பேத்கார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு நாளாக பிரகடனம் செய்து, அந்த நாளை தலித், இஸ்லாமியர், மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் எழுச்சி நாள் என பிரகடனப்படுத்தினார்.

★ 1992 இல், மதுரையில் பாபர் மஸ்ஜித் உடைப்புக்கெதிராக போராட்டம் நடாத்தினார்.

★ 1993 இல், அண்ணல் அம்பேத்காருக்கு எதிராக, சிவசேனா இந்திய அளவில் மேற்கொண்ட அவதூறுகளுக்கு எதிராக, மதுரையில் இரயில் மறிப்பு போராட்டத்தினை நடாத்தினார். இதில் நடந்த வன்முறையின் போது இரத்தம் சிந்தப்பட்டது.

★1997 இல், அரசுப்பணியில் இருந்து நீக்கப்பட்டார்.

★ 1998. விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினை, தேர்தலில் ஈடுபடுத்துவதன் மூலமே மக்களை அரசியல் ஈடுபாடு கொள்ள வைக்க முடியும் என்பதுடன், மக்கள் நலன்களையும், அரசியல், சட்ட பாதுகாப்பினையும் பெற முடியும் என கருதினார்.

★ 1999 இல், விடுதலை சிறுத்தைகள் கட்சி தேர்தல்களில் போட்டியிடும் என அறிவித்தார்.

★ 1999 இல் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில், சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்ட தொல். திருமாவளவன், 2,25,000 வாக்குகளைப் பெற்றபோதும் வெற்றி பெற முடியவில்லை.

★ 2001 இல், சட்ட மன்றத் தேர்தலில் மங்களூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று தமிழக சட்ட சபை உறுப்பினரானார்.

★ 2002 இல், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை பெற, அரசியல் பிரதி நிதித்துவத்தனை உறுதிப்படுத்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்களம் உள்ஊர் ஆட்சி மன்றங்களில் போட்டிபோட தீர்மானித்தார்.

★ 2002 இல், இலங்கை, வன்னிக்கு சென்று விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்தார்.

★ 2004 இல், கொள்கை ரீதியாக திமுக-வுடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால், திமுக கூட்டணியில் இருந்து சிறுத்தைகள் விலகியது. 2001ம் ஆண்டு தேர்தலில் திமுக-வுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட திருமாவளவன், திமுக-வின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் நின்று வெற்றிபெற்றிருந்தார். உதயசூரியனில் ஜெயித்த எம்எல்ஏ பதவியைத் தொடரவிரும்பாத திருமா, 2004ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் தேதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

★ 2004 இல், இந்திய நாடாளுமன்றத் தேர்தலில், சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்ட போதும் வெற்றிபெற முடியவில்லை.

★ 2006 இல், இந்திய தேர்தல் ஆணையத்தால் விடுதலை சிறுத்தைகள் கட்சி, பதிவு செய்யப்பட்ட அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் கட்சி என அறிவிக்கப்படுகிறது.

★ 2009 இல் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று, முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினரானார்.

★ 2012 இல், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தனியே தலித் மக்களுக்கான கட்சி என்பதையும் தாண்டி, இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், ஒடுக்கப்படும் அனைத்து மக்களுக்கு மான கட்சி என முன்னிலைக்கு வருகிறது.

★ 2014 இல் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் போட் டியிட்டு, வெற்றி பெற முடியவில்லை.

★ 2016 இல், 15 வருடத்திற்குப் பின், தமிழக சட்டமன்றத் தேர்தலில் காட்டுமன்னார் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற முடியவில்லை.

★ 2019, இல் இந்திய நாடாளுமன்றத் தேர் தலில் சிதம்பரம் தொகுதியில் போட்டி யிட்டு அதிகார ஆதிக்கத்தின் தடைகளைக் கடந்து வெற்றி பெற்று இரண்டாம் முறையாக நாடாளுமன்ற உறுப்பினரானார்.

★★★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.கஜமுகன்

# அமைப்பாய் திரள்வோம் - அதிகாரம் பெறுவோம்

" உங்கள் கொள்கை என்னவென்று கேட்டால், ஒரு நிமிசம் தலையே சுத்திப் போச்சு" எனக் கூறும் கொள்கை கோட்பாடில்லாதவர்கள் அரசியலுக்கு வரும் இக் காலகட்டத்தில் கொள்கையை முன்வைத்து எழுதப்பட்ட 'அமைப்பாயத் திரள்வோம்' என்னும் இந்நூலானது அமைப்பின் அவசியத்தைப் பற்றியும், அமைப்பின் நோக்கம், கொள்கை, கோட்பாடுகள் பற்றியும், அமைப்பினுள் எழும் சிக்கல்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றியும் பேசுகின்றது.

தனி உதிரியாக இருக்கும் மக்களை விட அமைப்பாக திரளும் மக்களுக்கே அரசியல் வலிமை அதிகம். ஆகவே ஒரு கட்சியின் சுயநலனுக்காக அல்லது வெறும் வாக்குகளாக மக்கள் திரளாமல் ஒரு அமைப்பாக மக்கள் திரளவேண்டும் என்பதே இந்நூலின் அடிநாதமாகும். பெரியார் முதல் அண்ணா வரை, கடந்த காலத்தில் திராவிடக் கட்சிகள் தமது கொள்கையை எழுத்து, பேச்சு மற்றும் உரையாடல் மூலமாகவே மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்தனர். அதன் தொடர்ச்சியாகவே திருமாவளவன் மக்களை விழிப்படையச் செய்யவும், அரசியல் ரீதியாக ஒடுக்கப்படும் மக்களை அமைப்பாக திரட்டவும் எழுத்தை தனது ஆயுதமாக பயன்படுத்துகிறார். அவரது அரசியல் போரின் கருத்தியல் ரீதியான எழுத்து வடிவமே, அமைப்பாய் திரள்வோம் என்னும் இந்நூலாகும்.

இந்தியாவில் மோடி, அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப், இங்கிலாந்தில் போரிஸ் ஜோன்சன் என வலது சாரிகள் பலம் பெற்று வரும் இன்றைய சூழ்நிலையில், இவர்களின் மூலம் பிற்போக்குத்தனமான அரசியற் கருத்துக்கள் மக்களை சென்றவடைத் தடுக்க, இது போன்ற முற்போக்கான தத்துவத்தை முன்வைக்கின்ற, கோட்பாட்டைப் பேசுகின்ற அரசியல் நூல்கள் வெளிவருவது அவசியமாகும். ஒவ்வொரு மனிதனின் செயலுக்குப் பின்னாலும் அறிந்தோ அறியாமலோ அவர்கள் உள்வாங்கியிருகின்ற கோட்பாடுகள்தான் முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. அக் கோட்பாடுகள்தான் அவர்களை வழி நடத்துகின்றது. ஒருவன் அடிப்படைவாதியாக, மதவாதியாக, ஆணாதிக்கவாதியாக இருப்பதற்கான காரணம் அவர்கள் நம்பும் கோட்பாடே ஆகும். இத்தகைய பிற்போக்குத்தனமான கோட்பாடுகளை கேள்விக்குள்ளாக்கி முற்போக்குச் சிந்தனையை முன்வைக்கின்றது இந்நூல்.

எதைப் பேசினால் அதிகம் விற்கும், எதைப் பேசினால் அதிகம் கை தட்டல் கிடைக்கும், எதைப் பேசினால் இங்கு நன்றாக எடுபடும் எனத் தெரிந்தும் அதைப் பற்றிப் பேசாமல், மக்களை ஒன்று திரட்டி அரசியல் மயப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் களத்தில் தான் பெற்ற அனுபவங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளாகவே ஒவ்வொரு கட்டுரைகளும் காணப்படுகின்றன. பெரியார், அம்பேத்கர், காரல்மார்க்ஸ் என எந்தவொரு தலைவரைப் பற்றியோ அல்லது அவர்களின் இயக்கத்தைப் பற்றியோ இந்நூல் பேசவில்லை. மாறாக அவர்களின் தத்துவத்தை முன் வைத்து கொள்கை பூர்வமாக எழுதப்பட்டுள்ளது. ஆகவே இது வெறுமனே விடுதலை சிறுத்தைக் கட்சியின் ஆதரவாளர்களுக்கான அல்லது அதன் தொண்டர்களுக்கான நூலாக அல்லாமல் அனைத்து உழைக்கும் மக்களுக்கான, ஒடுக்கப்படும் மக்களுக்கான நூலாக காணப்படுகின்றது. மேலும் மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்பதற்காக வெறுமனே கொள்கை தூய்மைவாதம் பேசி மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தாமல், முற்போக்கு சிந்தனைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.




இக் கட்டுரைத் தொகுப்பானது அன்பான சர்வாதிகாரத்தை போதிக்கவில்லை, பிறிதொரு இன மக்கள் மீதான வெறுப்பரசியலை கட்டமைக்கவில்லை, மக்களுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தவில்லை அல்லது நாளைக்கே புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கிலும் எழுதப்பட்டவையும் அல்ல, மாறாக மக்களுக்கு அரசியல் புரிதல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகளே இவையாகும். அரசியல் பயில்பவர்களுக்கான ஒரு கையேடு நூல் இது என்றால் அது மிகையாகாது. அது மட்டுமல்லாமல் பெண்கள் கட்சி சார்ந்த, அமைப்பு சார்ந்த மக்கள் பணிகளில் ஈடுபடலாமா? சமூகம் அதை அங்கீகரிக்குமா என்பது பற்றியெல்லாம் தெளிவான பார்வையை தனது கட்டுரைகளில் முன் வைக்கிறார் திருமாவளவன். இது வெறுமனே படிப்பதற்கான நூலல்ல, கற்பதற்கான நூல்.

சாதி, மதம், குடும்பம், இனம், தேசம் , அரசு, மொழி என பல கட்டமைப்புகள் உள்ள இன்றைய சமுதாயத்தில் தவிர்க்க வேண்டிய, திணிக்கப்பட்ட செயற்கையான அமைப்புகள் என்ன என்பதைப் பற்றியும், மானிடத்தின் தவிர்க்க முடியாத தேவைகளிலிருந்து உருவான அமைப்புகள் பற்றியும் பேசுவதோடு மட்டுமல்லாமல் தவிர்க்க வேண்டிய அமைப்புகள், தவிர்க்க முடியாமல் தொடர்வதற்கான பின்னணி காரணங்களையும் அலசி ஆராய்கிறது இந்நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதனால் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது, மனிதர்கள் ஒரு அமைப்பாக திரளும்போதுதான் மனித சமுதாயத்தில் மாற்றத்தை நிகழ்த்த முடியும். அவ்வாறு அமைப்பாக திரளும்போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் எழுகின்றன. அந்தவகையில், தன்னை முன்னிறுத்தல் என்பது அமைப்பில் பொதுவாக காணப்படும் மிக முக்கியமானதொரு பிரச்சனையாகும். அதற்கு தீர்வைக் காணும் பொருட்டு, அமைப்பு சார்ந்து செயற்படும் பொழுது ஏற்படும் உளவியல் சிக்கல்கள், உட்பகை, தன்முனைப்பு போன்றன பற்றியும் தனது கட்டுரைகளில் ஆய்வுக்குட்படுத்தியுள்ளார்.

அரசியல் மயப்படுத்தல் என்பது ஒவ்வொரு தனி நபரின் ஆளுமையை மேம்படுத்தி வலுப்படுத்துவதாகும். அந்த வகையில் மக்களை அரசியல் மயப்படுத்தி மேம்படுத்துவதற்கான அறிவாயுதமே 'அமைப்பாய்த் திரள்வோம்' என்னும் இந்நூலாகும்.

சு.கஜமுகன்

(தமிழ் சொலிடாரிட்டி ஒருங்கிணைப்பாளர். வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலும், மாத இதழ்களிலும் அரசியல் மற்றும் சினிமா குறித்த கட்டுரைகள் எழுதி வருபவர் இக் கட்டுரையாளர்)

★★★

# ஊய்த்துணரும் அரூபங்களால் ததும்பி நிற்கும்: 'அமைப்பாய்த் திரள்வோம்'

அசுரா

இந்த நூலில் சுற்றுச் சூழல், உரையாடும் தருணங்கள், காலம், நேரம், தருணம் குறித்த அவதானங்கள் என பல்வேறு புறநிலை, அகநிலை பாதிப்புகளால் உளவியல் போக்குகளில் ஏற்படும் மாற்றங்கள் விவரிக்கப்படுகிறது. மேற்கொள்ளப்படும் அரசியல் சமூக செயல்பாடுகளில் எமது உளவியல் போக்கை எவ்வகையில் புரிந்து கொள்வது, அதற்கான பயிற்சிகளின் முக்கியத்துவம் குறித்து சிந்திக்கவும் வைக்கிறது 'அமைப்பாயத் திரள்வோம்'.

இயற்கையின் ஒரு பகுதியாகவும், இயற்கையோடு இணைந்ததே மானுடம் என்பதையும், விஞ்ஞானத்திற்கு முன்பாகவே பௌத்தம் எமக்கு போதித்திருக்கிறது. உயிர் மட்டுமல்லாது நீர், நெருப்பு, நிலம், காற்று எனும் பருப்பொருட்களாலானது மனித உடல். ஆயினும் உரையாடல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நாம் உதிர்க்கும் சொற்கள் இயற்கையோடு இணைந்ததாகவும் இயற்கையின் சீற்றத்தோடும், இயற்கையின் பரிவோடும் கலந்தவை என்பதை இவ்வாறு சிந்திக்கின்றார்: "உரையாடல்கள் தொடர்வதும் உறவுகள் வளர்வதும் கையாளும் சொல்லாடல்களைப் பொறுத்தே அமையும். சொற்கள் வெறும் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் அல்ல, பெரும் விளைவுகளுக்கான வித்துக்கள்! ஒவ்வொரு சொல்லும் பிரபஞ்சக் கலவையின் சிதறல்களாகும். பஞ்சபூதங்களின் நுண்துகள்களாகும்! ஒவ்வொரு சொல்லிலும் பிரபஞ்சத்தின் வீரியமுண்டு! அவை நிலத்தைப்போல் பொறுக்கும்! நெருப்பைப்போல் எரிக்கும்! நீரைப்போல் தணிக்கும்! காற்றைப்போல் அடிக்கும்! விண்ணைப்போல் விரிக்கும்! அதாவது, பிரபஞ்சத்தின் பேராற்றலே சொற்களாகும். இவை, ஒலிவடிவமாய், வரிவடிவமாய் மனிதன் கொட்டும் உணர்ச்சிகளாகும்! மனிதன் உதிர்க்கும் சொற்கள் மட்டுமின்றி மனிதனே பிரபஞ்சத்தின் கலவைதான்!"(507-508). எனவே இந்த 'அமைப்பாய்த் திரள்வோம்' என்பது பல்வேறு சொற்களோடும், வார்த்தைகளோடும் இணைத்து நமக்கு நாமே உய்த்துணர்ந்து சிந்தித்து பொருள்கொள்ளும் ஒரு கலைச்சொற் களஞ்சியப் பிரதியாக ஓடிக்கொண்டேயிருக்கும் நீண்டதொரு அருவி.

இந்த பிரதியானது திருமாவளவனை வி.சி.க எனும் அரசியல் கட்சிக்கே உரிய ஒரு தலைவராகவோ, தலித் மக்களின் தலைவராகவோ, தமிழ் தேசியத்தின் தலைவர் என்பதான பல்வேறு அடையாளங்களையும் கடந்த ஒரு பிரதியாகவும் உள்வாங்க முடியும். இப்பிரபஞ்சத்தில் வாழும் ஒரு அறிவொளியுற்ற மனிதன் எனும் ஒரு அடையாளமாகவே எனக்கு காட்டுகிறது.

நீர்த்தாவரமான தாமரை நீரிலேயே தோன்றி, நீரிலேயே வளர்ந்து, நீரின்றே எழுந்திடினும், அது நீரினால் கறைபடியாதிருப்பது போலவே, உலகில் பிறந்தும், உலகில் வளர்ந்தும், உலகியல் கறைபடியாமல் நான் உலகை வென்றுள்ளேன். எனவே பிராமணரே என்னை அறிவொளியுற்ற மனிதரெனக் கருதுங்கள் (புத்தரும் அவர் தத்துவமும்:338). இதுபோன்றே இந்த 'அமைப்பாய்த் திரள்வோம்' பிரதியானது எம்மத்தியில் விதைக்கப்பட்டு வரும் கறைகளான சாதிய, மத, இன, மொழி எனும் கறைகள் படியாதிருக்கும் தமிழகத்து நீரில் தோன்றிய தாமரை திருமாவளவன் என எனக்கு காட்டுகிறது. இது பாரதிய ஜனதாக் கட்சியின் 'தாமரை' அல்ல. பௌத்தத்தின் 'தாமரை'.

அசுரா
(இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி
பிரான்ஸ்

★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதையாகிப்போன வல்லி நல்லதம்பி (நல்லான்) பட்டடையார்

## ஈழ சாதியத்துக்கெதிரான போராட்டத்தில் சில வரலாற்று குறிப்புக்கள்

**- கரவை தாசன் -**

எழுந்து பழுத்து வீழ முன்னே சதியால் நொறுக்கி வீழ்த்தப்பட்ட விதை. கன்பொல்லை கிராமத்தினைச் சேர்ந்த வல்லி நல்லதம்பி (நல்லான் ) பட்டடையார் ஆவார். பட்டடையார் என்றால் கிராமத்தின் தலைவர் என்பது பொருள்.

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி நகரப் பகுதியினை அண்டி கல்லோடை எனும் இயற்பெயரினையும் கணுவில் எனும் அரச பதிவுப் பெயரினையும் ஆதிக்க சாதி வெறியர்களால் கல்லோலை எனும் தூசனப்பெயரையும் தன்னகத்தே கொண்ட கிராமம் கன்பொல்லை . அறுபதுகளில் இடதுசாரிய அரசியல் சித்தாந்த பின்பலத்துடன் வடமராட்சியில் சாதியத்துக்கு எதிராக 1966களில் தொடங்கி 1971வரையில் நடந்து முடிந்த வெகுஜன போராட்டத்தின் அச்சாணியாக நின்று அந்தப்பகுதியில் தீண்டாமையை நீக்கியவர்கள் கன்பொல்லைக் கிராமத்து மக்களே என்பதனை வரலாற்றினை நேர்மையோடு அணுகுபவர்கள் ஏற்றுக்கொள்வர் கொள்வர். அதற்கும் முந்திய தொடக்கப் புள்ளி நல்லதம்பியிடம் கோள்கொள்கின்றது. அதன் நீட்சியில் அறுபதுகளில் எழிச்சியுடன் மாற்றம் கொண்ட பெயரே கன்பொல்லையாகும் .

வடஇலங்கையில் 1920 களில் ஆரம்பித்து 30கள் வரை இயங்கி வந்த யாழ்ப்பாண மாணவ வாலிப காங்கிரஸ் காலத்தில் சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு சமத்துவத்துக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. சம காலத்தில் வேறு சில குழுக்களும் சில தனி நபர்களும் ஒன்றிணைந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் இயங்கி வந்தனர். வடமராட்சிப்பகுதியில் வதிரியில் சூரர், புலோலியில் கந்தமுருகேசனார், கன்பொல்லையில் நல்லதம்பி போன்ற வேறு சிலரும் அவரவர் திசையில் இயங்கினர்.

வல்லி நல்லதம்பி அவர்களுக்கு சினத்தம்பி, மாணிக்கன், கந்தன், செல்லன் என தம்பியர்களும் பெரியாள், பிள்ளையாள், சின்னவி என பெண் சகோதரிகளையும் கொண்ட பெரிய குடும்பம் அதுவே அவரது பலம் தவிர அவர் ஏழு கடவை நிலத்துக்கு சொந்தக்காரராக இருந்திருக்கின்றார்.கூடலின் முதல் நடவடிக்கையாக கரவெட்டி ஆண்டார் வளவினைச் சேர்ந்த ஆதிக்க சாதி சித்தமணியம் உடையாருக்கு எதிராக உடையார் பதவிக்கு தேர்தலில் நின்றார். உடுப்பிட்டிச்சிங்கம் நல்லூர்த் தங்கம் என குறுந் தமிழ்த் தேசியவாதிகளால் கொண்டாடப்பட்ட மு.சிவசிதம்பரம் அவர்களின் வம்சவழிப் பேரன் தான் இந்த சித்தமணியம் உடையார். தேர்தல் அன்று நெல்லியடியில் பாரம் இறக்கும் தொழிலாளிகளான இவரது உறவினர்கள் கடத்திச்சென்று வைக்கப்பட்டனர். அதனால் சொற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளின் எண்ணிக்கையில் வெற்றி வாய்ப்பினை நல்லதம்பி இழந்தார். இருந்தபோதும் இதன் தெறிப்பில் தான் குடியிருந்த வளவினை சித்தமணியம் அவர்களுக்கு எதிர்வினையாக ஆண்டார்வளவு எனப் பிரகடனப்படுத்தினார். இன்றுவரையும் அவர் வாழ்ந்த இடம் ஆண்டார்வளவு என்றே அழைக்கப்படுகிறது.

ஒடுக்கப்பட்ட சாதியினை சேர்ந்தவர்கள் அந்நாட்களில் கல்வீடு கட்டுவது ஆதிக்க சாதியினரால் தடைசெய்யப்பட்டிருந்தது . அதற்கு எதிர்வினையாக தனது நண்பரான ஆதிக்க சாதியினைச் சேர்ந்த சீனா வெடியர் என்பவரை சம்மதிக்க வைத்து தனது சகலன் ஆறன் என்பவருக்கு கல்வீடு வளவு ஒன்றினை வாங்கிக் கொடுத்தார். இதுவே கன்பொல்லையில் நளவர் சமுகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான முதலாவது கல்வீடு ஆகும்.

அந்நாட்களில் கன்பொல்லையில் ஒரேசாதிக்குள் பத்துப் பரம்பரையை சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு கிணறு வெட்டும் உரிமை தடை செய்யப்பட்டிருந்தது. இவர்களின் குலதெய்வங்களான கூட்டத்தாருக்கோ அல்லது வைரவருக்கோ கல்லால் ஆன கோவில் கட்டுவதுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இவரது தலைமையின்கீழ் வைரவருக்கு கல்லால் ஆன கோவில்கள் கட்டப்பட்டன . அதில் ஒரு கோவிலின் மூலஸ்தானத்தில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டு முருகன் கோவில் உருவாக்கப்பட்டது . இவரது மைத்துனர் வள்ளிகந்தன் அப்போது கோவிலின் மணியகார அமர்த்தப்பட்டிருந்தார். அக்கோவிலே இன்றுள்ள செல்விசீமான் முருகன் ஆலயம்

அந்நாட்களில் ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள் மேல்சட்டை போடுவதும், ஆண்கள் வேட்டி சால்வை உடுப்பது அவர்களுக்கு தடை. இவரின் மைத்துனர் மாணிக்கன் தனது மனைவி மாங்கம்மாவுக்கு மேல்சட்டை போட்டு ஆதிக்க சாதி சித்தமணியம் உடையாருக்கு சொந்தமான கரவெட்டி வெல்லன் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றார். சட்டை கொக்கை சத்தகம் வைத்து கிழித்தெடுத்து அகற்றப்பட்டதுடன் அவரின் வேட்டி உருவி எடுக்கப்பட்டு மாங்கம்மாவுக்கு கட்டுவதற்கு கொடுக்கப்பட்டதாம். செய்தி நல்லதம்பியின் தலைமையில் சென்று அவ்வெள்ளானை தாக்கியுள்ளனர் அவன் உட்காயங்களினால் ஒரு மாதத்தில் இறந்துள்ளான். ஒடுக்கப்பட்ட சாதியினரிடம் அடிவாங்கினார் என்பது மறைக்கப்பட்டதினால், கவுரவப்பிரச்சினையில் வழக்கு தாக்கல் செய்யப்படாததினால் நல்லதம்பி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

கிராமத்தில் பத்துப் பொதுக்கிணறுகள் தோண்டப்பட்டன. கிணறு தோண்டும்போது ஆதிக்கசாதியினர் நேரில் சென்று தடுத்தனர். கன்பொல்லை வீரபாலன் தோட்டத்தில் கிணறுதோண்டும்போது ஏற்பட்ட கலவரத்தில் தனவந்தர் வேலன் வல்லி ஆதிக்கசாதியினரை நேராக எதிர் கொண்டார். வெள்ளான் ஒருவன் கிணத்தில் தள்ளிவீழ்த்தி கொல்லப்பட்டான். கவுரவத்துக்கு பயந்து ஆதிக்க சாதியினரால் வழக்கு பதிவு செய்யப்படாததினால் வேலன் வல்லி தண்டனையிலிருந்து தப்பித்தார். ஆனால் இச்சம்பவத்தின் பின் அவர் மேடர் வல்லி என்றே ஊரவரால் அழைத்துவரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். இதன் தொடர்ச்சியில் பல குடிசைகள் தீக்கிரை யாக்கப்பட்டன. தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளை பார்வை யிடவே தமிழர்களின் தலைவர் ஜீ.பொன்னம்பலம் போட்ட தடைகளையும் மீறி பொதுவுடைமை கட்சியாளர்களான பொன்கந்தையா, எம்.சி.சுப்பிரமணியம், ஜேம்ஸ், வீ.ரி. கணபதிப்பிள்ளை போன்றவர்கள் சோல்பெரி பிரபுவை கன் பொல்லைக்கு அழைத்து வந்தார்கள். இதன் பின்னணியில் நல்லதம்பி அவர்களின் குழுவே ஒத்தாசையாக செயற் பட்டது .

மாலை நேரங்களில் ஆதிக்க சாதியினரும் அவர்களின் எடுபிடிகளும் திடீர் திடீரென தோன்றி ஊரவரை தாக்குவார்களாம். பதிலுக்கு இவர்கள் களிமண்ணில் குண் டுகள் செய்து அதனை காய வைத்து அதனால் தாக்கு வார்களாம் . மண்ணினால் தாக்கினார்கள் என்பது வழக் கில் எடுபடாது என்பதுக்காக ஒரு பொறியாகவே இதனை செய்தார்களாம்.

தொடர்ந்து ஐம்பதுகளில் நெல்லியடி பட்டினசபை தேர்தலில் ஆதிக்கசாதியை சேர்ந்த மயிலர் என்பவருக்கு எதிராக நல்லதம்பி நின்று வெற்றியை சந்தித்தார் ஆனா லும் அவர் தனது நியமனத்தினை பொறுப்பேற்க முன்பே அவரையும் அவரது தம்பி மாரையும் விருந்துக்கென அழைத்து நய வஞ்சகமாக சாப்பாட்டுக்குள் மெல்லச் சாகும் மருந்திட்டுக் கொன்றார்கள். அவரது கடைசி தம் பியான செல்லன் மட்டும் உயிர்தப்பினார் அவரும் சித்த சுவாதினமற்றவராக இருந்தே இறந்தார் .

இச் செல்லன் என்பவரின் மகனாரே பொதுவுடைமைக் கட்சியாளர் வீ.எஸ்.சிவபாதம். இவர்கள் வீட்டில் இந்தியத் தலைவர் ப.ஜீவானந்தம் மூக்காண்டி என்னும் பெயரில் வந்து தலைமறைவாக சில காலம் தங்கியிருந்தார்.

கன்பொல்லையில் அறுபதுகளில் வீறு கொண்ட சாதியத் துக்கு எதிரான வெகுசன போராட்டத்தின் வித்தாக எட்டும் தூரத்தில் தெரிகின்ற பட்டடையார் நாமம் வாழ்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பாய் திரள்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து...

**- வாசன் -**

'அதிகாரத்தை வெல்வோம்' என்ற கொள்கை முழக்கத்தின் கீழ் அனைத்து மக்களையும் அரசியல் மயப்படுத்தி அணிதிரட்டும் வகையில் 'அமைப்பாயத் திரள்வோம்' என்ற நூலினை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தோழர் தொல்.திருமாவளவன் அவர்கள் எழுதியுள்ளார். இன்று அரசுகளினதும், அதிகாரங்களினதும், பன்னாட்டு நிதி நிறுவனங்களினதும் எதேச்சாதிகாரங்களும் அடக்குமுறைகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்து, அவை உழைக்கும் மக்களினதும் ஒடுக்கப்படும் மக்களினதும் குரல்வளையை மிக அதிகமாக நெரிக்கின்ற இந்நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் அவற்றிற்கெதிராக போராட வேண்டிய நிலைமைக்கு அனைத்து மக்களும் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் அதிகாரத்தை வெல்வது என்பது அரசியலதிகாரம் அல்லது ஆட்சியதிகாரம் என்பவற்றை வெல்வது என்பதை அடிப்படை செயற்பாடாக வைத்து ஒரு அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்கள் அமைப்பினை எவ்வாறு கட்டியமைப்பது என்பது குறித்தும் அச்செயற்பாடுகளில் எழுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும், 58 அத்தியாயங்கள் கொண்ட இப்பெரு நூலில் தோழர் திருமாவளவன் அவர்கள் விரிவாகவும் தெளிவாகவும் பல விடயங்களை எழுதியுள்ளார். இங்கு எம்மிடையே உள்ள அனைத்து அமைப்புகளிற்கும் சமூக செயற்பாட்டினருக்கும் ஒரு கையேடாக அமையும் வண்ணம் ஒரு அமைப்பினை செயற்படுத்தும் போது ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்கள், சவால்கள் குறித்து இந்நூல் மிக விலாவாரியாகப் பேசியுள்ளது. எனினும் தத்துவார்த்த அடிப்படையில் ஒரு பலவீனமான நூலாகவும் எம்முடன் பல முரண்பாடுகளை கொண்டுள்ள நூலாகவும் அமைந்துள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. முக்கியமாக 'பாட்டாளி வர்க்கக் கோட்பாட்டின் நீட்சியே தலித்தியம்' 'சிறுபான்மையினராகச் சிதறடிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலைக்கான அரசியலே தலித்தியம்' என்பன போன்ற பல கூற்றுக்கள் தொடர்பாக பல விவாதங்களை உருவாக்க வேண்டியதின் அவசியத்தினையும் நாம் கோரி நிற்கின்றோம்.

மேலும் ஒரு அமைப்பில் இயங்குபவர்களின் ஒழுக்கம் குறித்தும் கட்டுப்பாடுகள் குறித்தும் அவர் பேசும்போது ஒரு புரட்சிகர அமைப்பில் உள்ள உறுப்பினர்களிற்கு உரியதாகவன்றி ஒரு கல்வி, வணிக, ஆன்மீக நிறுவங்களில் பணிபுரியும் உறுப்பினர்களுக்கு உரியது போன்றும், பலவேளைகளில் ஒரு சுய முன்னேற்ற நூல் போன்றும் அமைந்திருப்பது அரசியல் நோக்கு கொண்டோருக்கு உவப்பானதாக இருக்காது.. ஆயினும் எதிர்காலத்தில் உயிர்ப்புடன் இயங்குகின்ற பல்வேறு அமைப்பினர்களும், அமைப்பு உறுப்பினர்களும் தவிர்க்க முடியாதபடி கற்றுக்கொள்ள வேண்டிய பல்வேறு விடயதானங்கள் இந்நூலில் அமைந்துள்ளன என்பதினையும் நாம் மறுக்க முடியாது. தொடர்ந்தும் தோழர் திருமாவளவனின் பணி சிறக்க எமது வாழ்த்துக்கள், ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலித் சமூக விடுதலை சாத்தியமா?

ஒரே ஆயுதம் அது வெட்டுவதற்கும் பயன்படுகிறது, ஒட்டுவதற்கும் பயன்படுகிறது என்றால் அது சனாதன தத்துவம் தான். இந்த ஆயுதத்தின் மூலம் இந்து மக்களை சாதிரீதியாக வெட்டி துண்டாடுவதற்கும், அதே மக்களை நாம் எல்லோரும் இந்துக்கள் என்று ஒரணியில் சேர்க்கவும் முடிகிறது. இந்தப் பேராயுதத்தைக் கொண்டு, இந்து ராஷ்ட்ரா எனும் இந்துத்துவ தேசத்தைக் கட்டமைப்ப தற்காக இந்துத்துவ சக்திகள் முயற்சிக்கின்றனர்.

தலித் மக்கள், சிறுபான்மை மக்கள், சாதி இந்துக்கள் - இந்த சமூகங்களுக்கிடையே உள்முரண்களை உருவாக்கி, நிரந்தரமாகப் பிரித்து வைத்திருப்பதன் மூலம் தங்களது அரசியல் நகர்வுகளை திறம்பட செயல்படுத்தி வருகின்றனர். அதிலும் குறிப்பாக தலித், இசுலாமிய சமூ கங்களைத் தொடர்ந்து பதட்டத்திலேயே வைத்திருப்பது, அதிகார மையத்தை இந்த இரண்டு சமூகமும் அணுகவே முடியாத அளவிற்கு அவர்களை பொது வெளியிலிருந்து துரத்தி அடிப்பது போன்ற சூழ்ச்சிகள் மூலமாக பார்ப்பனி யத் தலைமையை அதிகாரத்தின் உச்சியில் நிலைத்தி ருக்க செய்கின்றனர்.இந்துப் பெரும்பான்மை என்ற கட்ட மைப்பை வலுப்படுத்துவதன் மூலம் அதன் சாதியப் படி நிலைகள் தகர்ந்து விடாமல் பாதுகாக்கப்படுகிறது. அதற்காகவே மதச் சிறுபான்மை மக்கள் மீது தொடர் அழுத்தம் கொடுக்கப்பட்டு அவர்கள் மீண்டும் தாய் மதம் திரும்ப வேண்டும் என்ற கற்பிதங்களை, கர்வாப்சி போன்ற இயக்கங்கள் முழுமூச்சுடன் செயல்படுத்தி வருகின்றனர்.

00000

"சாதி ஒழிப்பே மக்கள் விடுதலை" என்ற உறுதியான முழக் கத்துடன் இந்துத்துவா சக்திகளின் பிடியில் சிக்காத கருத்தியலாளராக இந்துத்துவா சனாதனக் கொள்கை களை எதிர்த்து எந்த சமரசமும் இல்லாமல் போராடி வருகி றார் தொல். திருமாவளவன்.

தொடர் அரசியல் பணிச்சுமைகளுக்கு இடையேயும் திருமா வளவன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, முனைவர் பட்டம் பெறுகிறார். அவர் வேறெந்த தலைப்புகளையும் தேர்ந்தெ டுக்காமல் "மீனாட்சிபுர மதமாற்றத்தை" தனது ஆய்வின் தலைப்பாகத் தேர்ந்தெடுத்ததும் கூட, சமூக விடுத லைக்கான தீர்வை நோக்கிய அண்ணல் அம்பேத்கரின் அரசியல் பயணத்தின் ஒரு பகுதியாகத்தான் பார்க்கப்ப டுகிறது. எந்த கருத்தையும் தனது கருத்தாக சொல்வ தற்கு முன் அதைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடு ஆராய்ச்சி செய்து, அறிவியல் ஆய்வுகளோடு ஒப்பிட்டுப் பார்த்த பின்பு தான் தனது நிலைப்பாட்டை அறிவிக்கிறார் திருமாவளவன்.

1981ல் தலித் மக்கள் பெருமளவில் இசுலாத்திற்கு மதம் மாறிய சம்பவம், தேசத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அப்படியொரு மதமாற்றம் நடந்துவிடக்கூடாது, எப்படியே னும் தடுத்தே ஆக வேண்டும் என்ற முடிவோடு அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளும், அமைச்சர்களும் மீனாட்சிபுரத்தை முற்றுகை யிட்டுப் பார்த்தனர். ஆனாலும் அத்தனை நெருக்கடிக ளையும் கடந்து அந்த மக்கள் தங்களது முடிவில் உறுதி யாக நின்று மதம் மாறினர். பிறகும் கூட மீண்டும் இந்து மதத்தில் அவர்களை இணைத்திடுவதற்கு பெரும் முயற் சிகளும் மேற்கொள்ளப்பட்டது. தலித்துகள் மதம் மாறியே ஆகவேண்டும் என்று வலியுறுத்திய அண்ணல் அம்பேத்க ரின் தீர்வு சரியானது தானா, அந்த மக்கள் மதம் மாறுவ தற்கான காரணங்கள், அழுத்தங்கள் என்னவாக இருந் தது என்பது தொடர்பில் திருமாவளவன் அவர்கள் தனது ஆய்வினை கிரிமினாலஜி துறையின் அணுகுமுறையுடன் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார். மதம் மாறிய ஒவ்வொரு குடும்பத்தினரையும் சந்தித்து, அவர்களது வாழ்வியல் தகவல்களைத் திரட்டி, அறிவி யல்பூர்வமான தரவுகளுடன், புள்ளிவிபரங்களுடன் கூடிய ஆய்வறிக்கையை மனோன்மணியம் சுந்தரனார் பல்க லைக் கழகத்தில் சமர்ப்பித்துள்ளார். பல்கலைக்கழக வாய்மொழித் தேர்வில் அவர் கொடுத்த விளக்க உரை அந்த ஆய்வின் தரத்தைக் காட்டுகிறது.

ஆதிக்க சாதியினராலும், காவல்துறையின் சாதியப் பாகுபாட்டினாலும் மீனாட்சிபுரம் தலித் மக்கள் மிகவும் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். இந்து மதத்தில் இருக்கும் வரை சாதி, தீண்டாமை இழிவு நீங்காது என்பதை அம் பேத்கர் மற்றும் பெரியாரின் கருத்துக்களை உள்வாங்கிய சில தலித் இளைஞர்கள் உணர்ந்தனர்.

இந்த ஆய்வின் முடிவு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வலியுறுத்திய தலித் மக்களின் மதமாற்றம் மட்டும் தான் உண்மையான சமூக விடுதலையைத் தரும் என்ற கருத்தை உறுதி செய்கிறது. மேலும் மதம் மாறிய மீனாட்சிபுரம் மக்கள், அவர்களின் இலக்கான சமூக விடு தலையை அடைந்து தேசத்திற்கே முன்னுதாரணமாக உள்ளனர் என்பதை இந்த ஆய்வு அறிவுபூர்வமாக நிருபித்துக் காட்டியுள்ளது.

00000

" தீண்டதகாதவர்களுக்கு, பொருளாதார சுதந்திரம் முத லில் வேண்டுமா அல்லது சமூக விடுதலை வேண்டுமா எனக் கேட்டால் முதலில் சமூக விடுதலை தான் வேண்டும் என்பேன்" என்றார் அம்பேத்கர் அவர்கள். அந்தளவிற்கு தலித்துகளின் மதமாற்றக் கொள்கையில் உறுதியாக இருந்தார். என்னதான் கல்வியிலும், பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேறினாலும் அவர்களை சாதிய அடையாளத்துடன் பார்க்கும் அவலங்கள் தொடர்கதை யாகத்தான் உள்ளன?

பேர், புகழ், வசதிவாய்ப்பு என உச்சத்தில் இருந்தாலும் அவர்கள் மீது நவீனத் தீண்டாமை ஏவப்பட்டுக் கொண்டு தான் உள்ளது.

எனது நண்பர் ஒருவர் மருத்துவர், மருத்துவத்தை சேவை யாக மக்களுக்கு வழங்கி வருகிறார், ஒரு முக்கிய கட்சி யில் அரசியல் பொறுப்பில் உள்ளார். அவருடன் ஒரு நாள் பயணத்தில் இருந்த போது ஒரு சம்பவத்தைச் சொன்னார். "என்ன தான் நான் இந்த ஊரில் புகழ்பெற்ற மருத்துவராக இருந்தாலும், ஒரு கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், என்னை முன்னால் விட்டு பின்னால் என் காதுபட "இந்தா போறான் பாரு என்று என் சாதிப் பெயரை இழிவாக சொல்லுவான்.. சொல்றவனப் பார்த்தா அடுத்த வேளை கஞ்சிக்கு இல்லாதவனா இருப்பான், அப்படியே அவமானத்தில் நெஞ்சு வெடிப்பது போல இருக்கும், என்ன செய்வது காதில் விழாதவன் போல கடந்து போவேன்" என்றார். அவர் மருத்துவர் என்றாலும், ஓர் அரசியல் கட்சியில் முக்கியப் பொறுப்பில் இருந்தாலும், சாதி இந்துக்களுக்கு அவர் ஒரு இழிவான சாதிக்காரர், அவ்வளவு தான்.

எத்தனை பெரிய உயர்பதவிகள் வகித்தாலும், அவர் நீதிபதியாக இருந்தாலும், ஆட்சியாளராக இருந்தாலும், ஆளுநராக இருந்தாலும் கூட அவர் சாதிய அடையாளத்தைக் குறித்து அவர் மீது தீண்டாமைத் தாக்குதல் நடத்தப்படுகிறது. சாதியின் பெயரை மாற்றிவிட்டாலோ அல்லது சாதிச் சான்றிதழில் எதையும் குறிப்பிடாமல் விட்டு விட்டாலோ சாதிய தீண்டாமை இல்லாமல் போய்விடுகிறதா?

எங்கள் தொகுதியில் ஒரு அரசியல் பிரமுகர், பல முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்... அவரை எல்லோரும் 'பாராமுகம் பாரமலை' என கேலி செய்து பேசுவார்கள். அவரின் பெயர் பாரமலை தானே. அது ஏன் அவரை பாராமுகம் என்கிறார்கள் என விசாரித்தால், அவர் தொகுதியில் தனது கட்சிக்காரர்களின் எந்த ஒரு நல்லது கெட்டதிலும் கலந்து கொள்ளமாட்டார், தொகுதிப் பக்கமே வருவதில்லை அதனால் அவரை பாராமுகம் பாரமலை என்று சொல்வதாகக் கூறினார்கள். இதைப் பற்றி அவரிடம் நெருங்கிப் பழகிய சிலரிடம் விசாரித்த போது, அவர்கள் கூறிய செய்திகள் அதிர்ச்சியாய் இருந்தது. பாரமலை அவர்கள் தலித் சமூகத்தைச் சார்ந்தவர், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர் தலித் என்பதால் கட்சிக்காரர்கள் நடத்தும் எந்த விழாக்களுக்கும் அவரை அழைப்பது இல்லை, விழா அழைப்பிதழ்களில் அவரின் பெயர் போடுவது இல்லை. இன்னும் சிலர் கட்சித் 'குப் பயந்து அவரின் பெயரை அழைப்பிதழில் போட்டுவிட்டு அவரை அழைக்காமல் விட்டுவிடுவார்கள். அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்க இருப்பதே பாரமலை அவர்களுக்குத் தெரியாமலே போய்விடும். அவரை வேண்டும் என்றே திட்டமிட்டு தவிர்த்துவிட்டு " பாருங்கள் அவர் வெளியில் எந்த விழாக்களிலும் கலந்து கொள்வது இல்லை, அவர் தொகுதிப் பக்கமே வருவதில்லை" என்று அவர் மீது அவதூறுகளைப் பரப்புவார்களாம்.

திரு. பாரமலை அவர்கள் மிகச்சிறந்த பண்பாளர், நல்ல ஆங்கிலப் புலமை உள்ளவர், மிகச் சிறந்த நிர்வாகத் திறமையுள்ளவர். ஆனாலும் அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற காரணத்திற்காக அவரை சொந்த கட்சிக்காரர்களே ஒதுக்கி வைத்தனர். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சாதி இந்துக்களின் பார்வையில் அவர் ஒரு இழிவான சாதியாளராகத்தான் பார்க்கப்பட்டார். அதிகாரம் கைகளில் இருந்தாலும், உயர்ந்த கல்வி கற்றிருந்தாலும் தீண்டாமையின் கொடுமை சாகும் வரை தொடர்ந்து வந்து கொண்டு தான் இருக்கும். தீண்டாமை ஒழிவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியை ஒழிக்க வேண்டும், சாதிய இழிவுக்குள் இருந்து கொண்டே சமூக விடுதலையை அடையவே முடியாது.

தீண்டத்தகாதவர்களுக்கு சட்டம் வழங்கும் உரிமைகளைக் காட்டிலும் சமூகவிடுதலையே தேவை. அந்த சமூக விடுதலை உங்களுக்குக் கிடைக்காத வரை சட்டம் வழங்கும் எந்த உரிமைகளும் உங்களுக்கு எந்தப் பயனும் தராது என்கிறார் அண்ணல் அம்பேத்கர்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தலித் மக்கள் இந்துக்கள் அல்ல, அவர்கள் இந்நாட்டின் தொல்குடி மக்கள், உழைக்கும் மக்களை வருணாசிரமக் கொள்கைகளால் அடிமையாக்கிய சனாதன இந்து மதத்தை விட்டு வெளியேறுவதில் தான் உண்மையான சமூக விடுதலை கிடைக்கும் என்று போராடினார்.ஆனால் தலித் மக்களின் அடையாளங்களை இந்து மதத்திற்குள் இருந்து கொண்டு தேடுவதாக சொல்வது, அம்மக்களை வாழ்நாள் முழுதும் சாதிய தீண்டாமை எனும் இழிவுக்குள் அடக்கி வைக்கும் இந்துத் துத்துவத்தின் சூழ்ச்சியாகவே பார்க்கப்பட வேண்டும்."எப்படி நாட்டிற்கு சுதந்திரம் முக்கியமோ அதே போல் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகவிடுதலை முக்கியம் என்கிறார் அம்பேத்கர். சனாதனக் கொள்கைகளுக்கு எதிராக தொல். திருமாவளவன் முன் எடுக்கும் தொடர் போராட்டங்கள் என்பது அண்ணல் அம்பேத்கரும், ஜோதிராவ் பூலேயும், தந்தை பெரியாரும் விட்டுச் சென்ற புரட்சிகரமான பணிகள்.

"சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்" என்ற இலக்கை நோக்கிய சமூக விடுதலைப் போராட்டங்களுக்கு, நாம் அம்பேத்கரின் கொள்கைகளைப் பின்பற்றுவதா, இல்லை அம்பேத்கரின் முகமூடி அணிந்தவர்களைப் பின்பற்றுவதா என்பதை மக்கள் முடிவுசெய்து கொள்ளட்டும்..

- மால்கம் ஓ இராசகம்பீரத்தான்
keetru.com - ஒக்டோபர் 2018






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்க சாதி எதிர்ப்பார்ப்புகளுடன் கணக்குத் தீர்த்தல்

## என். சரவணன்

**சா**தியத்தின் உட்கிடக்கையே ஆதிக்கபடிநிலை சாதிகளின் மனவெதிர்ப்பார்ப்புகள் தான். அதில் தான் ஆதிக்க சாதியம் கோலோச்சுகிறது. அதில் தான் இருப்பு கொண்டுள்ளது. அதில் தான் சுகம் கண்டுகொண்டிருக்கிறது. அதில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

அதேவேளை இன்றைய நவீன காலத்தில் இந்த சாதிய ஆதிக்கத்தின் வடிவமானது சூட்சுமமாகவும், இயங்கிவருவதே அதன் புதிய நுண்ணரசியல் வடிவம். அந்த செயல் வடிவம் அந்த ஆதிக்க சாதிகளின் சாதிய 'எதிர்பார்ப்புகளால்' கட்டமைக்கப்படுகின்றன.

தனக்கு கீழ் இருக்கும் சாதி எப்படிப்பட்ட நடத்தைக் கொண்டிருக்கவேண்டும், கொண்டியங்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பில் சற்று பிசிறு ஏற்பட்டாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் ஆதிக்க மனநிலை இல்லை. அப்படி அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாதபோது வலிந்த வன்முறைகளால் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொண்ட காலத்தைக் கடந்து வந்திருக்கிறோம். இன்றும் அதன் எச்சசொச்சங்களை வெவ்வேறு வடிவங்களில் எதிர்கொண்டபடி இருக்கிறோம்.

ஒருவர் என்ன பண்பாட்டுக் கூறுகளை கொண்டிருக்க வேண்டும்? என்ன நடத்தையைப் பின்பற்றவேண்டும்? எந்தளவு வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்? எந்தளவு தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும்? எந்த கருத்தை வெளிப்படுத்தலாம்? அதை எந்த அளவுக்கு வெளிப்படுத்தலாம்? எந்த வடிவத்தில் வெளிப்படுத்தலாம்? மீறலின் எல்லை என்ன? என அனைத்துமே ஆதிக்க சாதிய எதிர்பார்ப்பில் உள்ள பட்டியல் தான்.

இந்த ஆதிக்க மனவெதிர்ப்பார்ப்பு என்பது வெறுமனே ஆதிக்க சாதிகளுக்கு உரிய குணம் மட்டுமில்லை. இதை சகல ஆதிக்க வடிவங்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். பெண்களின் மீதான ஆணாதிக்க எதிர்ப்பார்ப்பு, மூன்றாம் பாலினர் மீதான முதலாம் பாலினரின் எதிர்பார்ப்பு, வர்க்கத்தால் உயர்ந்தவர்கள் படிநிலையில் அடுத்துள்ள வர்க்கத்திடம் எதிர்பார்ப்பது, கருப்பு நிறத்தவர் மீதான வெள்ளை நிறத்தவரின் எதிர்பார்ப்பு, பெரும்பான்மை சமூகமொன்று சிறுபான்மை சமூகத்திடம் எதிர்ப்பார்ப்பது, நகர்ப்புறத்தில் உள்ளவர் கிராமப்புறத்தவரிடம் (அல்லது சேரிவாழ் மக்களிடம்) இருந்து எதிர்பார்ப்பது, வயதில் கூடியவர் வயதில் குறைந்தவரிடம் கொண்டுள்ள எதிர்பார்ப்பு, சுகதேகியொருவர் அங்கவீனரிடம் எதிர்பார்ப்பது என இப்படி இனம், பால், வர்க்கம், வயதுத்துவம், நிறம், பெரும்பான்மைத்துவம் என அடுக்கிக்கொண்டே போக முடியும்.

இந்த சமூகப் பிரிவினரில் மேற்குறிப்பிட்ட அடையாளங்களில் அதிகமான அடையாளங்களை ஒரு சேர இருப்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே அதிக பாதிப்புக்கு உள்ளாவர் என்பதை சொல்லித் தெரியத் தேவையில்லை. உதாரணத்திற்கு வர்க்கம், இனம், பால், நிறம், சாதி, பிரதேசம், குறை வயது போன்ற அத்தனையும் ஒரு சேர இருப்பவர்கள் அதிக எதிர்பார்ப்புகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாவார் என்பதை நாம் உணர முடியும்.

இந்த எடுகோளின் அடிப்படையில் ஆதிக்க சாதி எதிர்பார்ப்புகளை நான் தனிப்பட்ட ரீதியில் மிகவும் நுணுக்கமாகவே அனுபவித்திருக்கிறேன். அவை நுணுக்கமானது என்பதை பகிரங்கமாக கூறக் கூடிய சமூகத்தில் நாம் வாழவில்லை. அப்படி சொன்னால் நிச்சயம் இலகுவாக கேலிக்குள்ளாவது நாமாகத் தான் இருக்க முடியும். ஒரு தலித்திய செயற்பாட்டாளனாக இதை வெளிப்படுத்த சரியான தளம் கிடைத்தால் மட்டும்தான் உண்டு. அந்த வகையில் இவ்விடயம் பேசுபொருளாக வேண்டிய ஒன்று. நான் இங்கு எதைச் சொல்ல வருகிறேன் என்பதை அத்தகைய எதிர்கொண்ட ஒடுக்கப்பட்டோரால் மாத்திரம் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கைச் சூழலில் நான் ஒரு தமிழனாக, 'இந்து சமயத்தவனாக, கருப்பனாக, சக்கிலியனாக, விளம்புநிலை வர்க்கத்தவனாக, சேரிவாழ்க்காரனாக இவ்வடையாளங்கள் எனக்கு பல அனுபவங்களைத் தந்தாலும், ஐரோப்பாவுக்கு புலம் பெயர்ந்ததன் பின் இவ்வடையாளங்கள் மறுவடிவம் பெற்றுவிட்டன. இங்கு சக தமிழ் சமூகத்துடன் உறவாடுகையில் மேற்படி அடையாளங்களில் சில தொடரவே செய்கின்றன அதேவேளை இந்த வெள்ளையின நாட்டில் நிறத்துவமும், அந்நியன் என்கிற அடையாளமும், மொழியும், கலாசாரமும் கூட நம்மை இரண்டாந்தர, மூன்றாந்தர நிலைக்கு தள்ளி அங்கும் ஆதிக்க மனவெதிர்பார்ப்புக்கு புதிய வடிவத்தில் எதிர்கொள்ள நேரிட்டிருக்கிறது.

சில குறிப்பான அனுபவச் சம்பவங்களை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

0-0-0

இலங்கையில் இடதுசாரி இயக்கச் செயற்பாடுகளின் போது பெரும்பான்மை சிங்களத் தோழர்களுடன் அந்த இயக்கங்களில் பணியாற்றிய வேளைகளில் அவர்களின் அன்பும், அக்கறையும் அதிகமாகவே இருக்கும். ஏனென்றால் 'தமிழ் தோழர்'' என்பதால். ஆனால் பல இடங்களில் அவர்களின் எதிர்பார்ப்பு நான் அதிக குரல் உயர்த்தாதவனாக, கடும் வாதங்களில் ஈடுபடாதவனாக இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு இருந்ததை பல இடங்களில் எதிர்கொண்டிருக்கிறேன். அவர்களைப் பொறுத்தளவில் அவர்கள் அறிமுகப்படுத்தும் இடங்களில் மிகவும் அடங்கிய, பணிவுள்ளவனாக இருந்துவிட வேண்டும். அப்படியிருந்தால் அங்கு எனது இருப்பு சாத்தியம். ஆக, அங்கெல்லாம் மிகவும் கவனமாக அரசியல் பேச சரியான சந்தர்ப்பத்துக்காக காத்திருக்க வேண்டியிருந்தது. அவர்களின் பச்சாதாபத்தின் எல்லை இனவெதிர்பார்ப்புடன் நின்றுவிடுவதை கவனித்திருக்கிறேன். இதைப் பொதுமைப்படுத்தவில்லை. ஆனால் இதே அனுபவத்தை நான் பணியாற்றிய பல சிங்கள சூழலிலும் எதிர்கொண்டிருக்கிறேன். இதைத் தான் ஆதிக்க சாதிய எதிர்பார்ப்புகளும் நினைவு படுத்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0-0-0

எனது சிறு வயதில் ஒரு நிகழ்ந்த சம்பவம்:

எங்கள் தோட்டத்திற்குள் (கொழும்பில் சேரிகளுக்கு மறு பெயர் தோட்டங்கள்) நுழையும்போது வாசலில் இருந்த ஒரே ஒரு பிராமண வீடொன்று இருந்தது. அங்கிருந்த அய்யர் கோயிலில் உடைக்கப்பட்ட தேங்காய்களைக் கொண்டுவந்து குறைந்த விலைக்கு விற்பார். அங்கு நாங்கள் தேங்காய் வாங்குவது வழக்கம். ஒரு முறை என்னை வழக்கம் போல அம்மா தேங்காய் வாங்க அனுப்பியிருந்தார். கதவு மூடப்பட்டிருந்தது. மூடியிருந்த வீட்டை "அக்கா... அக்கா..." எனத் தட்டிக் குரல்கொடுத்த போது, அந்த பிராமணர் வேகமாக வந்து கதவைத் திறந்து பளீரென்று எனது கன்னத்தில் அறைந்தார்.

"எவள்டா உனக்கு அக்கா...? உனக்கு நாங்கள் எப்ப சொந்தமானமடா நாயே...?" என ஆத்திரத்துடன் கொதித்தார். நான் என் கன்னங்களை பிடித்தபடி அழுதுக் கொண்டே அவரைப் பார்த்தபடி நின்றேன். கதவை வேகமாக அடித்து மூடிவிட்டு அவர் உள்ளே சென்று விட்டார். நானும் திகைத்துப்போய் கண்ணீர் விட்டபடி வீடு வந்து சேர்ந்ததும் அம்மாவிடம் சொல்லி அழுதேன். அம்மாவுக்கு வந்தது ஆத்திரம். அம்மாவால் என்ன செய்துவிட முடியும்?. கடந்துவிட்டோம். நான் அவர்களை எப்படி அழைக்க வேண்டும் / எப்படி அழைக்கக்கூடாது என்பது பற்றிய அவர்களின் எதிர்பார்ப்பை நான் மீறியதே என் குற்றம்.

0-0-0

முகநூலில் நிகழ்ந்த ஒரு அரசியல் உரையாடலின் போது ஒரு கட்டத்தில் ஒருவர் எனது வாதத்தை எதிர்கொள்ள முடியாமல் போனதும் அவர் என்னை அடுத்த நாள் காலையில் தொலைபேசியில்அழைத்து 'சக்கிலியன்' என்று திட்டினார். அரசியல் ரீதியில் தனது தர்க்கம் தோற்றுப்போன நிலையில் என்னைக் காயப்படுத்த சாதிய வசவு தான் அவருக்கு கிடைத்த பேராயுதம். (இத்தனைக்கும் திட்டியவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்.) அதனை பொதுவெளியில் நான் வெளிப்படுத்தி கண்டித்தேன். எனக்காக எவரும் இருக்கவில்லை. தலித்தியம் பேசியோர் கூட ஒதுங்கியே இருந்தனர். அது மட்டுமன்றி சம்பந்தப்பட்ட நபர் அவர் பணியாற்றிய அரச நிறுவனத்தில் அதிகார துஷ்பிரயோகம் செய்து எனக்கு உதவுமாறு நான் கேட்டதாகவும், அதனை அவர் மறுத்ததால் நான் இப்படி குற்றம் சுமத்துவதாகவும் என் மீது அபாண்டமான அவதூறைப் பரப்பி விட்டார். நான் தனிமைப்படுத்தப்பட்டேன். அவரின் நண்பர்களாக இருந்த எனது தோழர்களும் என்னோடு இருக்கவில்லை.

0-0-0

பத்து வருடங்களுக்கு முன்னர் என்னை 'புலி எதிர்ப்பாளன்'என்கிற முத்திரையைக் குத்தி விடுதலைப் புலிகளின் முக்கிய ஆதரவாளர் ஒருவர் கிளாசால் தாக்கியதில் என் முகம் கடும் காயங்களுக்கு உள்ளானது. இடதுபுற காதுக்கு கீழுள்ள கன்னத்தில் 6 தையல்கள் இடுமளவுக்கு தோல் தோல் கிழிந்து தொங்கியிருந்தது. அந்த சம்பவத்தைக் கண்டித்து தோழர்கள் தமயந்தி, முரளி போன்றோர் பிரசுரமொன்றை வெளியிட்டார்கள். இந்த சம்பவத்திற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் இருந்த நுட்பமான சாதியத்தை அவர்கள் சாடினார்கள். குறிப்பாக எனக்காக குரல்கொடுக்க முன்வராத ஒஸ்லோவில் இருந்த 'முற்போக்கு' பேசிய தோழர்களின் சாதிய நுண்ணரசியலை அவர்கள் கண்டித்தார்கள். சம்பந்தப்பட்ட நான் இந்த விடயத்தில் நேரடியாக சாதிய காரணங்களைச் சுட்டிக்காட்டத் தயக்கமிருந்தது. நான் அதைச் செய்திருந்தால் அது தற்சார்பு சாய்வைக் கொண்ட குற்றச்சாட்டாகப் பார்க்கப்பட்டிருக்கும்.

0-0-0

ஐரோப்பாவில் இலக்கிய சந்திப்புகள், பல கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றுக்கு நான் அழைக்கப்பட்டால் சாதியம் குறித்தே அதிகம் பேச அழைக்கப்பட்டிருக்கிறேன். பல சந்தர்ப்பங்களில் சாதிய தலைப்பை நானே கேட்டுப்பெற்றிருக்கிறேன். 90களின் ஆரம்பத்திலிருந்து அரசியல், ஊடக, சமூக செயற்பாடுகளில் நான் ஈடுபட்டாலும் வேறு அரசியல் தலைப்புகளில் உரையாற்றுவதை விட சாதிய தலைப்பை தெரிவு செய்ததற்கு காரணம் தலித்திய அரசியலைப் பேசுவதற்கான தளங்கள் மற்றும் படி கிடையாது. கிடைக்கின்ற தளங்களை சந்தர்ப்பமாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்றும், பேசாப்பொருளை, பேச வேண்டிய பொருளை பேசியே ஆகவேண்டும் என்பதற்காகத் தான். இடையூறின்றி நமது விளக்கத்தை முழுமையாக ஒப்புவிக்க கிடைக்கின்ற அரிய சந்தர்ப்பங்கள் அவை. எனவே அக் கூட்டங்கள், கருத்தரங்குகளை நான் பயன்படுத்திக்கொள்வேன்.

இத்தனைக்கும் 'நமக்குள் அரசியல் ரீதியில் முரண்பாடுகள் இருக்கலாம், ஆனால் அதை தள்ளிவைத்துவிட்டு நமக்குள் இருக்கும் பொது உடன்பாடுகளான ஜூதலித் அரசியல்ஜி விடயத்தில் ஒன்றாக இருப்போம் என்கிற உடன்பாட்டைக் கண்டிருக்கிறோம்.

சமீபகாலமாக இலங்கை அரசியல் – வரலாறு சார்ந்து நிறையவே எழுதிவருகிறேன். அவை பலரின் ஆதிக்க மனவெதிர்ப்பார்ப்பை திருப்திபடுத்தவில்லையோ என்று தான் எனக்கு எண்ணத் தோன்றியது. சமூக வலைத்தளங்களில் நான் இடும் பதிவுகளின் கீழ் எனக்கு நெருக்கமானவர்களாக நான் நம்பியிருந்த தோழர்கள் பகிரங்கமாக என்னை சீண்டுவதன் உள்ளார்த்தத்தை நான் உணர்ந்து கொண்டேன். நான் இடும் பதில்கள் அவர்களால் சகிக்க இயலவில்லை. என்னிடம் மட்டும் அந்த சகிப்பை அவர்கள் எதிர்பாத்தார்கள். அவர்கள் என்னிடம் எதிர்பார்க்கின்ற பணிவை நான் தரமுடியாது போவதை சகிக்க முடியாதவர்களாகவே என்னால் இனங்கான முடிந்தது. எனது கட்டுரைகளின் ஆழமும், சீற்றமும் எனது சாதிய அடையாளத்துக்கு தகுந்ததல்ல என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றே உணர முடிந்தது.

இலங்கைப் பொறுத்தளவில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் தலித்துகளுக்கு, இந்தியவம்சாவளி தலித்துகளும் படிநிலையில் அவர்களுக்கு கீழானவர்களாகவே கருதப்படுவதை இங்கு நான் பதிவு செய்தாகவேண்டும். இதை மறுப்பவர்களை நான் எதிர்கொள்ள விரும்புகிறேன். அதாவது மலையக தலித்துகள் தலித்துகளிலும் தலித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தான். தலித்தியம் பற்றி பேசும்போதெல்லாம் சொந்த அனுபவங்களுக்கு ஊடாகத் தான் அதை சொல்ல வேண்டிய துர்ப்பாக்கியம் நமக்கு.

நாம் எந்த விதத்திலும் கொண்டாடப்படுபவர்களாக ஆகிவிடக்கூடாது என்பதில் ஆதிக்க தரப்பு விழிப்பாக இருக்கிறது, எதிர்க்கிறது, இயங்குகிறது. ஆனால் நாம் தோழமை பாராட்டுபவர்கள் கூட அப்படித்தான் இருக்கிறார்களென்றால் அதன் சூட்சுமத்தை கண்டறிய வேண்டியிருகிறது.

சென்ற வருடம் நான் எழுதிய நூலுக்கு இலங்கையில் அரச சாகித்திய விருது கிடைத்தது. அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முதன் முதல் கிடைக்கப்பெற்ற சாகித்திய விருது அது. அப்போதும் கூட அதை வரவேற்றவர்களின் எண்ணிக்கையை பத்துவிரல்களுக்குள் அடக்கிவிடலாம். போதாதற்கு ஏன் அரச விருதை நான் பெற்றேன் என்கிற வசவுக்கும் இன்னொரு பக்கம் ஆளாகினேன். நமக்கான அங்கீகாரத்தையும் வரவேற்பையும் நாம் மட்டுமே கொண்டாடும் அவல நிலை எல்லோருக்கும் நேர்வதில்லை என்பதை சொல்லித் தெரியத் தேவையில்லை. சாகித்திய விருது என்பது என் மக்களுக்கு தேவைப்பட்டது. என் சமூகம் தூக்கி வைத்து கொண்டாடினார்கள். அவர்களின் களிப்பில் நான் கலந்தேன். அதற்கு மேல் எதுவும் இல்லை.

தலித்தியம் பேசுவது என்பது அவ்வளவு இலகுவானதுமில்லை, இன்பமானதுமில்லை. உயர்த்தப்பட்டவர்கள் பேசும்போது அவர்களுக்கு ஒரு மதிப்பும் கிடைத்துவிடுகிறது. ஒடுக்கப்பட்டவர்கள் பேசும்போது அவர்களின் அடையாளம் வெளிப்பட்டு அவமானப் பார்வைக்கு உள்ளாக்கப்படுவிடுகிறார்கள். என்னை யார் என்று அறிந்ததும் என்னை ஒருபடி மேலே வைத்து எவரும் பார்க்கப்போவதில்லை. மாறாக என்னை ஒரு புழுவைப் போலத் தான் பார்க்கப் போகிறார்கள். அப்படித்தான் பார்த்து வந்திருக்கிறார்கள்.

தலித்தியம் பற்றி பேசுவதை நிறுத்தச் சொல்லி எனது குடும்பத்தினரும், உறவினர்களும், சில நண்பர்களும் கேட்டுக்கொண்டபோதேல்லாம் அதையும் மீறி அவமானங்களை எதிர்கொண்டபடி எனது அடையாளத்தை பெருமிதமாகக் கூறிக்கொண்டு நான் தலித்திய அரசியல் பேசியது அந்த பாவப்பட்ட மக்களுக்காகத்தான். நான் தலித்தியம் பேசுவதாலேயே என்னை விட்டு தூரம் விலகிய என் உறவினர்கள் உள்ளார்கள். நான் அவர்களின் உறவினர் என்று தெரிந்தால் அவர்களின் அடையாளம் அம்பலப்பட்டுவிடும் என்கிற பீதியை நான் உணர்ந்துகொள்கிறேன். அதனால் அம்மக்களுக்காக யாராவது தம்மை இழக்கத் துணியத் தான் வேண்டும். பெரியார் கூறியது போல "நான் அதை மேற்போட்டுக்கொண்டு" செய்யத் துணிந்திருக்கிறேன். எனது பின்னணியைத் தெரியாதவர்களுக்கும் என்னை தெரியப்படுத்துவதன் மூலம் நான் சுமக்கப்போகும் அவமானங்கள் எனது குழந்தைகளுக்கும் சேரப்போகிறது என்கிற பீதி அவ்வப்போது தொற்றிக்கொள்ளவே செய்கிறது.

இந்தளவு தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே நமது தலித்திய அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பணிகளுக்குப் பின்னால் எந்த தலித்திய அமைப்போ, சக்தியோ நபர்களோ இன்றி தான் பயணித்து வந்திருக்கிறேன். இந்த தனிமைப்படுத்தல் தற்செயல் இல்லை என்பதை உணர உங்களுக்கு பெரிய ஆராய்ச்சி தேவைப்படப் போவதில்லை.

சாதி ஆணவக்காரர்களுக்கு சாதி எதிர்ப்பார்ப்புகள் தமது சாதி மேனிலை உறுதிபடுத்துவதற்கான வழி மட்டுமே. ஆனால் எமக்கோ இது அன்றாட வாழ்க்கை. எமது எதிர் காலச் சந்ததியை விடுவிப்பதற்கான அவமானம் நிறைந்த போராட்டம். இந்த அவமானங்களுக்கு நாங்கள் பழக்கப் பட்டுவிட்டோம். இந்த அவமானங்களுக்கும், எதிர்ப்பு களுக்கும் நாங்கள் எங்களை விலைகொடுக்க எப்போதோ உறுதியெடுத்துக் கொண்டுதான் இந்தப்பணியில் இறங்கி யிருக்கிறோம். இந்த வசவுகளுக்கும், ஏளனத்துக்கும் எதிர் பார்ப்புகளுக்கும் எங்களைப் பலியாக்குவதாக என்றோ நாங்கள் உறுதியெடுத்துக்கொண்டுதான் இந்தப்பணியில் இறங்கியிருக்கிறோம். இந்தப்பணி எங்களுக்கு வசதியா னது இல்லை தோழர்களே!

ஆதிக்க சாதியினர் பெருமிதத்துடன் தமது சாதியை அறி வித்துக்கொண்டு பணியாற்றுவதைப்போல அல்ல எங்கள் பணி. ஒடுக்கும் சாதி தன்னை அறிவித்துப் பணியாற் றுவதும், ஒடுக்கப்படும் சாதி தன்னை அறிவித்துப்பணி யாற்றுவதும் ஒன்றுக்கொண்டு நேரெதிரான மிகப்பெரிய வேறுபாடு உடையவை. துருவமயமானசிக்கல் நிறைந் தவை.

நேர்மையான ஆதரவு சக்திகளிடம் நாங்கள் கேட் டுக்கொள்வதெல்லாம் 'என்னிடம் பச்சாதாபம் காட்டா தீர்கள்! கருணை காட்டாதீர்கள்! சிறுமையாக ஆக்கா தீர்கள்! முக்கியமாக என்னிடம் இருந்து அப்பாவித்த னத்தை எதிர்பார்க்காதீர்கள். நான் எப்படி என்னை வெளிப் படுத்தவேண்டும், என் அரசியல் நடத்தை எப்படி இருக்க வேண்டும் என்கிற அவர்களின் எதிர்பார்ப்பே எமக்கு எதி ரான மனநிலையை அவர்களிடம் உருவாக்கி விடுவதா கவே உணருகிறேன். சமூக நீதியை அதன் உள்ளார்த்தத் திலேயே இயங்க வழி விடுங்கள்.'



கவிஞர் இன்குலாப்புடன் Dr. தொல். திருமாவளவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25th August 2019,
Time 1100 - 1300 hrs

Place:

Brunei Gallery LectureTheatre,
SOAS, University of London.

Title of the talk:
Rise and challenges of
Viduthalai Chiruthaikal Katchi
**விடுதலை சிறுத்தை இயக்கத்தின் சவால்களும் எழுச்சியும்** (in Tamil)

**Welcome Address:**
Mr O. Kokularupan, Vimbam, London

**Opening Remarks:**

Professor David Mosse,
Department of Social Anthropology,
SOAS, University of London

Lecture by

Dr.Thol.Thirumavalavan,
Member of Parliament, India and
President, Viduthalai Chiruthaikal Katchi

Followed by Q&A


Coordinater: Murali Shanmugavelan
Researcher
SOAS, University of London

Tholkappiyan Thirumavalavan is a Tamil politician, a social activist, Member of Parliament and the President of the Viduthalai Chiruthaigal Katchi (Liberation Panther Party) party in the state of Tamil Nadu in India. He is an influential Dalit leader who fought for social justice outside of electoral politics but changed his position and has been active in electoral politics since 1999. His core political value is about ending caste-based oppression of the Dalits and others oppressed caste groups. Thirumavalavan is a supporter of Tamil nationalist movements, and his theorisation of Tamil nationalism is a social force to elimination caste oppression amongst Tamils. Thirumavalavan is a federalist and a staunch critic of Hindutva politics.

தொல்காப்பியன் திருமாவளவன் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல்வாதி, சமூக செயற்பாட்டாளர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர். திருமாவளவன் ஒடுக்கப் பட்ட தலித் மற்றும் விளிம்புநிலை மக்களுக்காகப் போராடி வருகிற முக்கியமான தலித் ஆளுமையாவார். தலித் மக்களின் சமூகநீதிக்காக 1999-ஆம் ஆண்டிலிருந்து தமிழக தேர்தல் அரசியல் களத்தில் தொடர்ச்சியாக பங்கெடுத்து வந்துள்ளார். தொண்டர்களால் அன்போடு எழுச்சித் தமிழர் என்றழைக்கப்படும் திருமாவளவனின் அரசியல் கருத்தியல் சாதியொழிப்பை அடிப்படையாகக் கொண்டது. திருமாவளவனின் தமிழ் தேசியக் கோட்பாடு சாதி ஒழிப்பை முன்வைத்து தமிழர்களிடையே சமத்துவத்தை வளர்க்கும் நோக்குடையது. கூட்டாட்சி கொள்கையில் பிடிப்புடைய விடுதலை சிறுத்தைக் கட்சியின் தலைவர் திருமாவளவன், இந்துத்துவ கொள்கைக்கு எதிராகவும் ஒடுக்கப்பட்டவர்களுக்கான குரலாகவும் இருந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டமும் கற்கையும் இரு கண்கள்

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசியல் இயக்கம் தொடங்கி தமிழக அரசியலில் சுமார் கால் நூற்றாண்டு காலமாக அரசியல் கட்சி தலைவராக வெற்றி கண்டுள்ளார் திருமாவளவன். தமிழக அரசியலில் தனக்கென ஒரு தனி அடையாளத்தை உருவாக்கி தவிர்க்க முடியாத அரசியல் தலைவராக திருமாவளவன் உருவெடுத்துள்ளார் என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நேரத்தை செலவிட்டு, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழகத்தில் ஆய்வு மாணவராக தன்னை இணைத்துக் கொண்ட திருமாவளவன், தமிழகத்தில் உள்ள சாதி படிநிலைகள் குறித்தும், சாதி சமூகத்தில் எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் ஆய்வு மேற் கொண்டு அதில் தேர்ச்சியும் பெற்று தொல். திருமாவளவன் டாக்டர் தொல் திருமாவளவனாக அந்தஸ்து பெற்றார்.

பலர் டாக்டர் பட்டங்களை தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி பெற்று வரும் நிலையில் தனது முழு நேர பொது வாழ்க்கைக்கு மத்தியிலும், இரண்டு மூன்று ஆண்டுகளாக நேரத்தை செலவழித்து கடின உழைப்பின் மூலம் படித்து டாக்டர் பட்டம் பெற்றவர் திருமாவளவன் என அனைத்து தரப்பினரின் பாராட்டுப் பெற்றார்.

**தோழர் Dr. தொல். திருமாவளவனுடனான முதல் நான் நிகழ்வு**

**24 August 2019**

**Trinity Centre, London E12**

**வரவேற்பு: கே. கே. ராஜா**
**அறிமுகம்: ச. முரளி**
**தலைமை: ராகவன்**

**சிற்றுரைகள்:**

மாதவி சிவலீலன்
நாதன் (அசுரா) - பிரான்ஸ்
கரவை தாசன் - டென்மார்க்
ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து
சு. கஜமுகன்
தேவதாசன் - பிரான்ஸ்
என். சரவணன் - நோர்வே
தோழர் ச. வேலு

**அமைப்பாய்த் திரள்வோம் நூல் வெளியீடு**
**வெளியீட்டுரை:**

நா. சபேசன்

**இடைவேளை**

**பேருரை:**

தோழர் Dr. தொல். திருமாவளவன்

**கலந்துரையாடல்-**
**வழிப்படுத்தல்: எம். பௌசர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனுசங்கடா நாங்க மனுசங்கடா"

"மனுசங்கடா நாங்க மனுசங்கடா"
உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா

எங்களோட மானம் என்ன தெருவில கிடக்கா - உங்க
இழுப்புக்கெல்லாம் பணியுறதே எங்களின் கணக்கா - அட
உங்களோட முதுகுக்கெல்லாம் இரும்புல தோலா
நாங்க ஊடு புகுந்தா உங்க மானம் கிழிஞ்சு போகாதா

உங்க தலைவன் பொறந்த நாளு போஸ்டர் ஒட்டவும்
உங்க ஊர்வலத்தில தர்ம அடிய வாங்கிக் கட்டவும் - அட
எங்க முதுகு நீங்க ஏறும் ஏணியாகவும் - நாங்க
இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்

குளப்பாடி கிணத்துத் தண்ணி புள்ளய சுட்டது
தண்ணியும் தீயாய்ச் சுட்டது - இந்த
ஆண்டைகளின் சட்டம் எந்த மிராசைத் தொட்டது
சதையும் எலும்பும் நீங்க வச்சத் தீயில் வேகுது - உங்க
சர்க்காரும் கோர்ட்டும் அதுல எண்ணய ஊத்துது
எதைஎதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க - நாங்க
எரியும்போது எவன் மசுர புடுங்கப் போனீங்க - டேய்
மனுசங்கடா நாங்க மனுசங்கடா

உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடாஜி


- **கவிஞர் இன்குலாப்**



(25 டிசம்பர் 1968இல் தமிழ்நாட்டில், கீழ்வெண்மணி கிராமத்தில், ஆதிக்க சாதி நிலக்கிழார்களால் நடத்தப்பட்ட 20 பெண்கள், 19 குழந்தைகள் உட்பட 44 பள்ளர் வேளாண் தொழிலாளர்கள் படுகொலை நிகழ்வை படம் பிடித்துக் காட்டுவதாக அவரின் 'மனுசங்கடா' கவிதை இருந்தது. அன்றைய காலக்கட்டத்தில் அந்தப்பாடல் ஒலிக்காத பொதுவுடைமை மேடைகள் இல்லை என்று கூறலாம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றி : ஓவியர் மருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SOMA SOLICITORS

34 Eastcote Lane, South Harrow, Middlesex HA2 8DB

COMMISSIONERS FOR OATHS

WE SPECIALISE IN

- **Residential & Commercial Conveyancing**

  உங்களது வீடுகளை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும்.

  உங்களது வியாபார ஸ்தாபனங்களை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- **Immigration & Nationality**
- **Family & Matrimonial**
- **Licensing Applications**
- **Landlord & Tenant**

## 020 8423 0203

Mobile: 07919 388 355 Fax: 020 8423 6465

**OPENING TIMES: MON - FRI 9.30am to 5.30pm**

www.somasolicitors.co.uk

email: admin@somasolicitors.co.uk

THE LAW SOCIETY • ACCREDITED

Conveyancing Quality